# நடப்பு நிகழ்வுகள்- ஜுலை 05 - 2017

- "மைத்ரி 2017" (Maitree-17) எனப்படும் இந்தியா மற்றும் தாய்லாந்து நாடுகளின் இராணுவங்களுக்கிடையேயான கூட்டு இராணுவ பயிற்சி ஹிமாச்சல் பிரதேச மாநிலத்திலுள்ள "பாக்லோ" (Bakloh) எனுமிடத்தில் நடைபெற்றது.

- உலகின் மிக நீளமான நீருக்கடியிலான கேபிள் இணைப்பை (submarine cable system) கொண்டுள்ள நிறுவனம் எனும் பெருமையை "ரிலையன்ஸ் ஜியோ" நிறுவனம் பெற்றுள்ளது.

- இங்கிலாந்து நாட்டில் லண்டனில் 30 ஜுன் 1937-ல் 999 என்ற எமர்ஜன்சி எண் முதல் முதலாக பயன்படுத்தப்பட்டது. இதன் 80 ஆண்டு நிறைவு 30 ஜுன் 2017.

- 2016-17 –ம் ஆண்டில் இந்தியாவின் தொழிற்சாலைகள், தொழில் வளர்ச்சிகள் குறித்து ரிசர்வ் வங்கியால் எடுக்கப்பட்ட ஆய்வின் அடிப்படையில் நாட்டிலேயே அதிகளவிலான தொழிற்சாலைகள் நிறைந்த மாநிலமான தமிழ்நாட்டு (16% தொழிற்சாலைகள்) உள்ளது என தெரிவித்துள்ளது.

- பெரு நாட்டில் உள்ள லிமாவில் கடந்த மார்ச் மாதம் நடந்த 28-வது உலக அளவிலான ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் கல்வி மற்றும் கலாச்சார (UNESCO) அமைப்பினால் மனித உயிர்கோள காப்பக திட்டத்தின் கீழ் தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அகஸ்தியர் மலை உலகலாவிய உயிர்கோள காப்பகத்தின் (Agasthyamalai Biosphere Reserve) ஒரு பகுதியாக தேர்வு செய்யப்பட்டது.

- கிரிகிஸ்தான் நாட்டில் உள்ள பிஷ்கேக் நகரில் ஆசிய கோப்பைக்கான ஸ்னூக்கர் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி மற்றும் லக்ஷ்மன் ராவுத் ஆகியோர் பாகிஸ்தானின் மொகமது பிலால் மற்றும் பாபர் பாசிக் கை வென்று சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளனர்.

- கால்பந்து அணிகளுக்கான FIFA வின் உலக தரவரிசையில் இந்தியா 100-வது இடத்தில் இருந்து 4 இடங்கள் முன்னேறி 96-வது இடத்தை பிடித்துள்ளது.

- சேலம் மாவட்டம் ஏற்காடு மலைப்பகுதியில் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

- தமிழகத்தில் மருத்துவ படிப்பில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 5 சதவீதமாக உயர்த்தி அரசு புதிய அரசாணை வெளியிட்டுள்ளது.

- AIIB சமீபத்தில் குஜராத்தின் அனைத்து (33) மாவட்டங்களில் உள்ள 4,000 கிராமங்களின் சாலைகளை கட்டமைப்பதற்காக $329 டாலர்களை ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank (AIIB)) வழங்கியுள்ளது.

- இந்தியாவில் முக்கிய வங்கிகளை தேசியமயமாக்கி 48 ஆண்டுகள் நிறைவானதையொட்டி இந்தியாவில் முதன்முதலாக 2017-க்கான "பொதுத்துறை வங்கிகளை காப்பாற்றுங்கள்" நாள் ஜுலை 19 அன்று வங்கி சங்கங்களின் ஐக்கிய மன்றத்தால் (United Forum of Bank Unions (UFBU)) அனுசரிக்கப்படவுள்ளது.

- கர்நாடக அரசு அண்மையில் 'Elevate 100' எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 100 புதுமையான முயற்சிகளை கண்டுபிடித்து அதனை அடுத்த நிலைக்கு உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் Karnataka Biotechnology and Information Technology Services (KBITS)-ன் ஆரம்பகால திட்டமாகும்.

- தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதியான பி.எஃப் பணத்தை நிறுவனங்களிடமிருந்து வசூலிக்க 5 வங்கிகளுடன் ஈபிஎஃப்ஓ அமைப்பு ஒப்பந்தம் செய்துள்ளது. பாங்க் ஆப் பரோடா, ஐசிஐசிஐ, எச்.டி.எஃ.சி, ஆக்ஸிஸ் மற்றும் கோட்டக் மகேந்திரா வங்கி.